# விம்கோ நகர் மெட்ரோ ரயில் பாதையில்

# பாதுகாப்பு கமிஷனர் இன்று சோதனை



சென்னை, பிப். 5–

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, மெட்ரோ ரயில் பாதையில், ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், இன்று விரைவு ரயில் இயக்கி சோதனை நடத்துகிறார்.

சென்னை, வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, 3,770 கோடி ரூபாய் செலவில், 9.1 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாதையில், ஜன., 31ல் ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் விரைவு ரயில் இயக்கி, சோதனை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டடிருந்தது.

நிலையங்களில், தானியங்கி டிக்கெட் இயந்திரங்கள், மின் மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளிலும், சில பணிகள் முடிக்க தாமதமானதால், பாதுகாப்பு கமிஷனரின் சோதனை ஒத்தி வைக்கப்பட்டது.

இப்பாதையில் உள்ள நிலையங்கள், பயணியரின் பயன்பாட்டுக்கு போதுமான அளவில், கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால், வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே, தென் பிராந்திய ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், இன்று விரைவு ரயில் இயக்கி சோதனை நடத்துகிறார்.

காலை, 9:00 மணிக்கு, வண்ணாரப் பேட்டையில் இருந்து, விரைவு ரயில் சோதனை ஓட்டம் துவங்குகிறது.

இச்சோதனைக்கு முன், இப்பாதையில் உள்ள அனைத்து நிலையங்களிலும், தேவையான வசதிகள் முழுவதுமாக செய்யப்பட்டுள்ளதா என, பாதுகாப்பு கமிஷனர் சோதனை நடத்துகிறார்.

இப்பாதையில், பயணியர் ரயில் இயக்க பாதுகாப்பு கமிஷனர் அனுமதி கொடுத்ததும், வரும், 14ம் தேதி சென்னை வரும் பிரதமர் மோடி, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடக்கும் விழாவில், காணொளி காட்சி வாயிலாக, இப்போக்குவரத்தை துவங்கி வைக்க உள்ளார்.